
# திருவரங்கத்தமுதனார்
# அருளிச் செய்த ப்ரபந்ந காயத்ரி என்னும்
# இராமானுச நூற்றந்தாதி




## பாசுரம்-14

கதிக்குப்பதறி*வெங்கானமும்கல்லும்கடலுமெல்லாம் கொதிக்கத்
தவஞ் செயுங்கொள்கையற்றேன்* கொல்லிகாவலன் சொல்
பதிக்கும் கலைக்கவி பாடும் பெரியவர் பாதங்களே
துதிக்கும் பரமன்* இராமானுசன் என்னைச் சோர்விலனே.




**பாசுரக் கருத்து**

"ஸ்ரீ குலசேகரப் பெருமாளுடைய கவிகளைப் பாடுபவர்களை ஏத்தும் எம்பெருமானார் என்னைக் கைவிடமாட்டார். ஆகையாலே இனிப்பேறு பெற வேண்டித் தவம் செய்யும் கொள்கை இல்லாதவனாயினேன்.

**பதவுரை**

**கதிக்குப் பத்றி..............கொள்கையற்றேன்:**
பேற்றை எவ்வழியிலாவது பெற்று விட வேண்டும் என்று ஆத்திரப்பட்டு, மிகக் கொடிய தவம் செய்ய எக்காலத்திலும் நான் முயலமாட்டேன் என்றபடி.

**பாசுர அர்த்தம்**

ஸ்ரீ குலசேகரப் பெருமாள் சாஸ்திரச் சொற்களை பதிய வைத்திருக்கும் கவிகளை பாடுகிற, பெருமை உடையவர்களுடைய திருவடிகளை, ஸ்தோத்திரம் செய்யும், தன்னிலும் மேற்பட்டவர் வேறொருவரும் இல்லாத எம்பெருமானார், என்னைக் கைவிட்டு விடமாட்டார். ஆகையால் பேற்றுக்கு ஆத்திரப்பட்டு, வெம்மை வாய்ந்த காட்டிலும், மலைகளிலும்,ஸமுத்திரத்திலும், எல்லா இடமும்

கொதிக்கும்படியாக தவம் புரியும்
கொள்கையில்லாதவனாயினேன்.

**பாசுரம்-15**



பெரியாழ்வார்

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால்* தொல்லைமாலை யொன்றும்
பாராது அவனைப்பல்லாண்டென்றுக் காப்பிடும்* பான்மையந்தாள்
பேராதவுள்ளத்துத்திராமானுசன் தன் பிறங்கியசீர்
சாராமனிசரைச் சேரேன்* எனக்கு என்ன தாழ்வினியே?

**பாசுரக் கருத்து**

பெரியாழ்வார் திருவடிகளை விட்டு நீங்காத திருவுள்ளம் படைத்த, எம்பெருமானார் குணங்களைத் தங்களுக்குச் சார்பாக கொள்ளாதவர்களைச் சேர மாட்டேன்.

**பதவுரை**

பல்லாண்டென்றுக் காப்பிடும் பான்மையன்:
பெரியாழ்வார் பல்லாண்டு, பல்லாண்டு பலகோடி நூறாயிரம் என்று காலத்தைப் பெருக்கி, நீடுழி தீர்க்காயுஸ்ஸாய் வாழ வேண்டுமென்று, எம்பெருமானை மங்களாசாசனம் செய்து பாடுகிறார்.

இங்ஙனம் பல்லாண்டு பாடி, “உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு” என்று காப்பிடுவது பெரியாழ்வாருடைய இயல்பு.அது தோன்ற அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் என்கிறார்.
தான் அழிவற்று, மற்ற அனைவரையும் அளிக்கும் பரம்பொருளை அங்ஙனம் பாராமை அறியாமையன்றோ? மயர்வற மதிநலம் வாய்ந்த பெரியாழ்வாருக்கு, அது குறையாகாதோ எனின் ஆகாது. இவ்வறியாமை கன்மத்தால் வந்ததாயின் குறையாம். அன்பின் மிகுதியால் வந்ததால் குறையாகாததோடு பெருமையும் கூட. இதனை சோராத காதல் பெருஞ்சுழிப்பால் பாராது” என்பதனால் உணர வைத்தார் அமுதனார்.

**பாசுர அர்த்தம்**

பெரியாழ்வார், குறையாது பொங்கும் பரிவாகிய சுழிப்பால், நித்யனாய் சக்தியுடைய எம்பெருமான் சக்தியைப் பாராது, பல்லாண்டு பாடிக் காப்பிட்டார். இவருடைய திருவடிகள் அகலாத, நெஞ்சுடைய இராமாநுசரின் திருக்குணங்களைச் சாராத மனிதர்களுடன் அடியேன் சேரேன். இவ்வுறுதிக்குப் பின் எனக்கு என்ன குறை உண்டு.

**பாசுரம்-16**



சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து* தலமுழுதும் கலியே
ஆள்கின்றநாள் வந்து அளித்தவன் காண்மின்* அரங்கர் மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்ற வள்ளல்* இராமானுசனென்னும் மாமுனியே.

**பாசுரக் கருத்து**

ஆண்டாள் அருளினால் வாழ்வு பெற்றவரான எம்பெருமானார், மறைநெறியை நிலைநாட்டிக் கலியைக் கெடுத்து, உலகினுக்குப் பேருதவி புரிந்ததை இப்பாசுரத்தில் அருளிச் செய்கிறார்.

**பதவுரை**

அரங்கர் ..................சூடிக் கொடுத்தவள்:

அமுதனார் ஏனைய இடங்களிற் போல அரங்கன் என்னாது அரங்கர் என்று பன்மையிற் கூறுகிறார். ஆண்டாள் ப்ரணயரோஷம் தலையெடுத்து,அங்ஙனமே பலகாலும் பன்மையிற் சொன்னதை அப்படியே கையாண்டபடி. அரங்கன் ஆண்டாளின் மீது உள்ள காதல் மிகுதியால், ஸ்ரீரங்கத்தில் உள்ள வடிவோடு அமையாது, அவளது அவதாரஸ்தலமான ஸ்ரீவில்லிபுத்துரிலும், வடபெருங்கோயிலுடையான் வடிவங் கொண்டு, காத்துக் கிடத்தலின் அரங்கர் என்று பன்மையிற் கூறினாராகவுமாம்.

## பாசுர அர்த்தம்

அரங்கனுடைய திருமுடியில் சுற்றிக் கொள்கிற, திருமாலையை, தன் குழலிலே அணிந்து கொடுக்கும் பெருமை வாய்ந்த ஆண்டாளினுடைய இயல்பான க்ருபையினாலே வாழ்ந்துக் கொண்டிருக்கிற வள்ளலும், மாமுனியுமான எம்பெருமானார், குறைவொன்றில்லாத வேதம், இழிவுப்பட்டு, அதனால் பூமி எங்கும் கலிபுருஷனே, செங்கோல் செலுத்துகிற காலத்திலே, அவ்வேதத்தை வாழ்விக்க எம்பெருமானார் திருவவதரித்தார்.

## பாசுரம்-17

முனியார் துயரங்கள் முந்திலும்* இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார் மனம் கண்ணமங்கை நின்றானை * கலைபரவும்
தனியானைத் தண்தமிழ் செய்த நீலன் தனக்கு உலகில்
இனியானை * எங்களிராமானுசரை வந்தெய்தினரே.



நீலன்

**பாசுரக் கருத்து**

திருமங்கையாழ்வாருக்கு இனியரும், எங்களுக்கு நாதருமான எம்பெருமானாரைப் பற்றினவர்கள், இன்பதுன்பகளாற் கலங்க மாட்டார்கள்.

**பதவுரை**

**கண்ணமங்கை நின்றானைக் கலைபரவும் தனியானையை:**
திருக்கண்ணமங்கையில் எழுந்தருளிக்கும் எம்பெருமானுக்கு பத்தராவி என்னும் திருநாமம். வேதமனைத்தும் தன் ஒருவனையே, துதிக்கும் நோக்கமுடையவகளாய் இருத்தல் பற்றி வந்த , செருக்கு தோற்ற, மதம் பிடித்த யானையைப் போல் தோற்றமளிக்கிறான் அவ்வெம்பெருமான் திருமங்கையாழ்வாருக்கு. வெஞ்சின களிற்றை(7-10-8) என்று பெரிய திருமொழியில், சினமுடைய யானையைப் போல இருப்பவன் என்று அவ் வெம்பெருமானை திருமங்கையாழ்வார் வருணித்துள்ளார். அவ்வெம்பெருமான், திருமங்கையாழ்வாருடைய, ஈடு இல்லாத தண்தமிழைக் கண்டு வியக்கிறான்.

## பாசுர அர்த்தம்

சாஸ்திரங்கள் துதிக்கும், ஒப்பற்ற மதங்கொண்ட யானையைப் போன்றவனான, திருகண்ணமங்கையில் எழுந்தருளியிருக்கும் பத்தராவி எம்பெருமானை, குளிர்ந்த தமிழ்க் கவி பாடின திருமங்கையாருக்கு, உலகத்தில் அன்பரான எங்களுடைய எம்பெருமானாரை, அடைந்து பற்றினவர்கள், துயரங்கள் ஏற்பட்டாலும் வருந்தார்கள். இன்பங்கள் உண்டானாலும் உள்ளம் நெகிழ மாட்டார்கள்.

## பாசுரம்-18



மதுரகவியாழ்வார்

எய்தற்கரிய மறைகளை* ஆயிரம் இன் தமிழால்
செய்தற்கு உலகில் வரும் சடகோபனை* சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும் பெரியவர் சீரை உயிர்களெல்லாம்
உய்தற்கு உதவும்* இராமானுசன் எம் உறுதுணையே.

**பாசுரக் கருத்து**

நம்மாழ்வாரை தம் நெஞ்சில் வைத்து, தியானம் செய்யும் மதுரகவியாழ்வாருடைய குணங்களை, இராமானுசர், அனைத்து ஆன்மாக்களும், உய்வு பெற விவரித்தார். அன்னாரே எனக்கு உற்ற துணை.

## பதவுரை

பெரியவர்: பகவானைத் தம் உள்ளத்திலே வைத்துக் கொள்ளுதல் முதல் நிலையாகும். அது எல்லா ஆழ்வார்களுக்கும் பொதுவானது. ஆச்சார்யனைத் தம் உள்ளத்திலே வைத்துக் கொள்ளுதல் இறுதி நிலையாகும். அது ஏனையோருக்கன்றி, மதுரகவியாழ்வாருக்கே அமைந்ததொன்றாகும். ஆச்சார்யனைத் தம் சிந்தையுள்ளே பெய்தற்கு இசைந்துள்ளது, இவரது இறுதி நிலை வாய்ந்த பெருமை, என்பது தோன்றப் பெரியவர் என்றார்.

## பாசுர அர்த்தம்

அடைதற்கு எளிதில் இயலாத வேதங்களை, ஆயிரம் இனிய பாசுரங்களில், அருளிச் செய்வதற்கு , உலகில் அவதாரம் செய்தருளும் நமாழ்வாரை, தம் சிந்தையுள்ளே வைத்துக் கொள்வதற்கு,பொருத்தமான பெருமை வாய்ந்த ஸ்ரீ மதுரகவியாழ்வாருடைய நற்குணங்களை, அனைத்து ஆத்மாக்களும் உஜ்ஜீவிப்பதற்காக, உபகரித்தருளும் எம்பெருமானார் எமக்கு உற்ற துணையாவார்.

---